நல்வழி

[உரையுடன்]

கம்பன் தகுதியாக்கப் பள்ளி

கம்பன் மணி மண்டபம்

காரைக்குடி-2.

அவ்வையார் அருளிய

நல்வழி

[உரையுடன்]

கம்பன் தகுதியாக்கப் பள்ளி

கம்பன் மணி மண்டபம்

காரைக்குடி–2.

உரை : கம்பன் அடிப்பொடி

முதற் பதிப்பு—1973

உள்ளுறை

அச்சிட்டோர் :
ஷண்முகம் பிரஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை-1.

ஓம்

வெளியீட்டுரை

அவ்வையார் என்னும் கல்விக்கரசியார் ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். முறையாகப் பயிற்றுவிப்பதற்கு என்றே சில பாடநூல்களை ஆக்கி உபகரித்தவர். அவை பன்னூறு ஆண்டுகளாகப் பயன் சுரந்து கொண்டிருக்கின்றன.

அவற்றுள் 'ஆத்தி சூடி', 'கொன்றை வேந்தன்', 'வாக்குண்டாம்' மூன்றையும் உரையுடன் வெளியிட்டோம். அதைத் தொடர்ந்து, 'நல்வழி' இப்பொழுது உரையுடன் வெளிவருகிறது.

இந் நூல் முதற் பகுதியில் மூலத்தை மட்டும் கொண்டிருக்கும். அதை அடுத்த பகுதி மூலமும் உரையுமாக விளங்கும். மூலம் மட்டும் உள்ள பகுதியில், செய்யுள்கள் சீர் பிரிக்கப் பெற்றும், சந்தி, விகாரம் எதுவும் பிரிக்கப் படாமலும், காணப்பெறும். இதனுல் வெண்பா யாப்பு முறையை மட்டு மன்றி, மொழிச் சேர்க்கை நெறியையும் புரிந்துகொள்ள இயலும்.

மூலமும் உரையுமாக உள்ள பகுதியில் செய்யுள்களைச் சீர் பிரிக்காமலும், சந்தி விகாரங்களை எல்லாம் பிரித்தும் சொல்லுருவம் நன்கு புலப்படுமாறு அமைக்கப் பெற்றுள்ளன. அதனதன் அடியில் அதனதன் உரை தரப் பெற்றுள்ளது. இதனுல் மாணுக்கர்களின் இலக்கண அறிவு வளம்பெறும். மூலப் பகுதிச் செய்யுளையும், உரைப் பகுதிச் செய்யுளையும், ஒப்பு நோக்கிச் சொற்களின் புணர்ச்சி, அதனுல் ஏற்படும் தோன்றல், திரிதல், கெடுதல், போன்ற விகாரங்கள் ஆகியவற்றை எளிதாக உணரலாம்.

பயனுள்ள முறையில் கல்வி பயிற்றுவிக்க வேண்டுமென்று தொடங்கப் பெற்ற கம்பன் தகுதியாக்கப் பள்ளி, அவ்வையார் நூல்கள் ஒவ்வொன்றையும் முழுமையாகக் கற்பிக்க முயல்கிறது. இந்த நோக்கம் செவ்விதின் நிறைவேற இறையருளை முற்கொண்டு பள்ளியே சில நூல்களை வெளியிடுகிறது. அவ் வரிசையில் இது மூன்ருவதாகும்.

கம்பன் அறநிலையின் அறங்காவலராய் இருந்து பேருதவி புரிந்து வரும் அறப் பெருஞ் செம்மல் காரைக்குடித் திருவாளர் : அ. சொ. அண்ணுமலை செட்டியார் அவர்கட்கு இதை அன்புடனும் நன்றிப் பெருக்குடனும் படைக் கிருேம்.

காரைக்குடி
1—6—1973

கம்பன் தகுதியாக்கப் பள்ளி,
கம்பன் மணிமண்டபம்.

ஓம்

அவ்வையார் அருளிய

'நல்வழி'

மூலம் மட்டும்

காப்பு

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்றருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

நூல்

புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொரு—ளெண்ணுங்கா
லீதொழிய வேறில்லை யெச்சமயத் தோர்சொல்லுந்
தீதொழிய நன்மை செயல். 1

சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கா
னீதி வழுவா நெறிமுறையின்—மேதினியி
லிட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி. 2

இடும்பைக் கிடும்பை யியலுடம்பி தன்றே
இடும்பொய்யை மெய்யென் றிராதே—யிடுங்கடுக
வுண்டாயி னுண்டாகு மூழிற் பெருவலிநோய்
விண்டாரைக் கொண்டாடு வீடு. 3

எண்ணியொருகருமமியார்க்குஞ்செய் யொண்ணுது
புண்ணியம் வந்தெய்து போதல்லாற்—கண்ணில்லான்
மாங்காய் விழவெறிந்த மாத்திரைக்கோ லொக்குமே
யாங்கால மாகு மவர்க்கு. 4

வருந்தி யழைத்தாலு வாராத வாரா
பொருந்துவன போமினென்ருற் போகா—விருந்தேங்கி
நெஞ்சம்புண் ணுக நெடுந்தூரந் தாநினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். 5

உள்ள தொழிய வொருவர்க் கொருவர்சுகங்
கொள்ளக் கிடையா குவலயத்தில்—வெள்ளக்
கடலோடி மீண்டு கரையேறி னுலெ
னுடலோடு வாழு முயிர்க்கு. 6

எல்லாப் படியாலு மெண்ணினு லிவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை—நல்லா
ரறிந்திருப்பா ராதலினு லாங்கமல நீர்போற்
பிறிந்திருப்பார் பேசார் பிறர்க்கு. 7

ஈட்டும் பொருண்முயற்சி யெண்ணிறந்த வாயினுமூழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாந்—தேட்ட
மரியாதை காணு மகிதலத்தீர் கேண்மின்
றரியாது காணுந் தனம். 8

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கா லுலகூட்டு—மேற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ராஞலு
மில்லையென மாட்டா ரிசைந்து. 9

ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலு
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்—வேண்டா
நமக்கு மதுவழியே நாம்போ மளவு
மெமக்கென்னென் றிட்டுண் டிரும். 10

ஒருநா ளுணவை யொழியென்றா லொழியா
யிருநாளுக் கேலென்றா லேலாய்—ஒருநாளு
மென்னோ வறியா யிடும்பைகூ ரென்வயிறே
யுன்னோடு வாழ்த லரிது. 11

ஆற்றங் கரையின் மரமு மரசறிய
வீற்றிருந்த வாழ்வு விழுமன்றே—யேற்ற
முழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. 12

ஆவாரை யாரே யழிப்பா ரதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவ—ரோவாம
லையம் புகுவாரை யாரே விலக்குவார்
மெய்யம் புவியதன் மேல். 13

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கா
லிச்சைபல சொல்லி யிடித்துண்கை—சிச்சீ !
வயிறு வளர்க்கைக்கு மான மழியா
துயிர்விடுகை சால வுறும். 14

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை—யுபாய
மிதுவே மதியாகு மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும். 15

தண்ணீர் நிலநலத்தாற் றக்கோர் குணங்கொடையாற்
கண்ணீர்மை மாருக் கருணையாற்—பெண்ணீர்மை
கற்பழியா வாற்ருற் கடல் சூழ்ந்த வையகத்து
ளற்புதமா மென்றே யறி. 16

செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கா
லெய்த வருமோ விருநிதிய—வையத்
தறும்பாவ மென்ன வறிந்தன் றிடார்க்கின்று
வெறும்பானை பொங்குமோ மேல். 17

பெற்ருர் பிறந்தார் பெருநாட்டார் பேருலகி
லுற்ரு ருகந்தா ரெனவேண்டார்—மற்ருே
ரிரணங் கொடுத்தா லிடுவ ரிடாரே
சரணங் கொடுத்தாலுந் தாம். 18

சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையா
ஞழி யரிசிக்கே நாம். 19

அம்மி துணையாக வாறிழிந்த வாருெக்குங்
கொம்மை முலைபகர்வார் கொண்டாட்ட—மிம்மை
மறுமைக்கு நன்றன்று மாநிதியம் போக்கி
வெறுமைக்கு வித்தாய் விடும். 20

நீரு நிழலு நிலம்பொதியு நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வு—மூரு
வருந்திருவு வாணுளு வஞ்சமிலார்க் கென்றுந்
தருஞ்சிவந்த தாமரையா டான். 21

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் பியாரே யனுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம். 22

வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை. 23

நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்
ஆறில்லா வூருக் கழகுபாழ்—மாறி
லுடற்பிறப் பில்லா வுடம்புபாழ் பாழே
மடக்கொடி யில்லா மனை. 24

ஆன முதலி லதிகஞ் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
யெல்லார்க்குங் கள்ளனாய் யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு. 25

மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயர்ச்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்போம் பறந்து 26

ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகு
மன்றி யதுவரினு வந்தெய்து—மொன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கு
மெனையாளு மீசன் செயல். 27

உண்பது நாழி யுடுப்பது நான்குமுழ
மெண்பது கோடிநினைந் தெண்ணுவன—கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையுஞ் சஞ்சலமே தான். 28

மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
யிரந்தழைப்பா ரியாவருமங் கில்லை—சுரந்தமுதங்
கற்றா தரல்போற் கரவா தளிப்பரே
லுற்றா ருலகத் தவர். 29

தாந்தாமுன் செய்தவினை தாமே யனுபவிப்பார்
பூந்தா மரையோன் பொறிவழியே—வேந்தே
யொறுத்தாரை யென்செயலா மூரெல்லாங் கூடி
வெறுத்தாலும் போமோ விதி. 30

இழுக்குடைய பாட்டிற் கிசைநன்று சால
வொழுக்க முயர்குலத்தி னன்று—வழுக்குடைய
வீரத்தி னன்று விடாநோய் பழிக்கஞ்சாத்
தாரத்தி னன்று தனி. 31

ஆறிடு மேடு மடுவும்போ லாஞ்செல்வம்
மாறிடு மேறிடு மாநிலத்தீர்—சோறிடும்
தண்ணீரு வாருந் தருமமே சார்பாக
வுண்ணீர்மை வீறு முயர்ந்து. 32

வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவா வேழத்திற்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும். 33

கல்லானே யானுலுங் கைப்பொருளொன் றுண்டாயி
னெல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வ—ரில்லாணை
யில்லாளும் வேண்டாண்மற் றீண்டெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல். 34

பூவாதே காய்க்கு மரமுமுள மக்களுளு
மேவாதே நின்றுணர்வார் தாமுளரே—தூவா
விரைத்தாலு நன்ருகா வித்தெனவே பேதைக்
குரைத்தாலுந் தோன்ரு துணர்வு. 35

நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்திற்
கொண்ட கருவளிக்குங் கொள்கைபோ—லொண்டொடீஇ
போதந் தனங்கல்வி பொன்றவருங் காலமயன்
மாதர்மேல் வைப்பார் மனம். 36

வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலா
மெனைத்தாய நூலகத்து மில்லை—நினைப்பதெனக்
கண்ணுறுவ தல்லாற் கவலைபடே னெஞ்சேமெய்
விண்ணுறுவார்க் கில்லை விதி. 37

நன்றென்றுந் தீதென்று நானென்றுந் தானென்று
மன்றென்று மாமென்று மாகாதே—நின்றநிலை
தானதாந் தத்துவமாஞ் சம்பறுத்தா ரியாக்கைக்குப்
போனவா தேடும் பொருள். 38

முப்பதா மாண்டளவின் மூன்றற் றெருபொருளைத்
தப்பாமற் றன்னுட் பெருளுயிற்—செப்புங்
கலையளவே யாகுமாங் காரிகையார் தங்கண்
முலையளவே யாகுமா மூப்பு. 39

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவு
மூவர் தமிழு முனிமொழியுங்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லு
மொருவா சகமென் றுணர். 40

நல்வழி வெண்பா நாற்பதும் முற்றும்

ஓம்

அவ்வையார் அருளிய

'நல்வழி'

மூலமும்—உரையும்

காப்பு

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்து உனக்கு நான் தருவேன்;—கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூ மணியே! நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

கோலம் செய் = அழகுபடுத்திய; துங்க = பெருமையுள்ள; கரிமுகத்து = யானை முகத்துடன் கூடிய; தூ = பரிசுத்தமான; மணியே = மாணிக்கமே! நான் = அடியேன்; உனக்கு = நின்றனக்கு; பாலும் = பசுவின் பாலும்; தெளிதேனும் = தெளிந்த தேனும்; பாகும் = கருப்பட்டிப்பாகும்; பருப்பும் = பாசிப்பருப்பும்; இவை நாலும் = இந்த நான்கு பொருள்களையும்; கலந்து = பக்குவமாய் அளவாகச் சேர்த்து; தருவேன் = படைப்பேன்; எனக்கு = அடியேனுக்கு; சங்கத்தமிழ் மூன்றும் = மதுரைச் சங்கத்தாரால் வளர்க்கப்பட்ட (இயல்—இசை—நாடகம் என்னும்) தமிழ் மூன்றையும்; நீ தா = நீ தந்தருள்க!

நான்கு பொருள்களை நான் உனக்குப் படைக்கிறேன் பிள்ளையாரே! நீ எனக்கு மூன்று பொருளை அருள்க!

புண்ணியம் ஆம்; பாவம் போம்; போனநாள் செய்தஅவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள்;—எண்ணுங்கால்
ஈது ஒழிய வேறு இல்லை, எச் சமயத்தோர் சொல்லும்;
தீ துஒழிய, நன்மை செயல். 1

புண்ணியம் ஆம் = அறச்செயல் எல்லா நன்மைகளையும் ஆக்கும்; பாவம் போம்=பாபச் செயல் உள்ள நன்மைகளையும் போக்கும்; போனநாள்=முற் பிறப்பில்; செய்த அவை=ஆற்றிய புண்ணிய பாவங்களே; மண்ணில் பிறந்தார்க்கு=மண்ணுலகில் பிறந்த மக்களுக்கு; வைத்த பொருள் = இப் பிறப்பில் அனுபவிக்கத் தேடிவைத்த செல்வம்; எண்ணுங்கால்=ஆராய்ந்துபார்க்கும்பொழுது; எச் சமயத்தோர் சொல்லும்=எந்த மதத்தவருடைய உறுதி மொழியும்; ஈது ஒழிய = இஃது அல்லாமல்; வேறு இல்லை=மற்றொன்று இல்லை; எனவே, தீது ஒழிய= பாபத்தை நீக்கி; நன்மை செயல் = புண்ணியத்தைப் புரிதலே பயனுடையதாகும்!

முற் பிறப்பில் செய்த பாப புண்ணியத்திற்கு ஏற்ப இப் பிறப்பில் இன்பமும் துன்பமும் நம்மை வந்தடைகின்றன. எனவே பாபம் செய்யாமல், புண்ணியமே செய்ய வேண்டும். இதுதான் எல்லா மதங்களும் கூறும் உறுதிமொழி.

சாதி இரண்டு ஒழிய வேறு இல்லை, சாற்றுங்கால்;
நீதி வழுவா நெறி முறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர்; இடாதார் இழி குலத்தோர்;
பட்டாங்கில் உள்ளபடி. 2

பட்டாங்கில் உள்ளபடி=உண்மை அறநூல்களில் கண்ட வண்ணம்; நீதி வழுவா நெறி முறையின்=நியாயம் தவருது ஒழுக்க வழி நின்று; சாற்றுங்கால்=நன்கு தெரியும்படி அறிவிக்கும் இடத்து; மேதினியில் = பூவுலகில்; சாதி=குலமானது; இரண்டு=இரண்டே; ஒழிய

வேறு இல்லை = அவ்விரண்டை அன்றி மற்றொன்று இல்லை ; இட்டார் = ஈவோர்; பெரியோர் = மேற்குலத்தார்; இடாதார் = ஈயாதவர்கள்; இழிகுலத்தோர் = தாழ்ந்த வகுப்பார்.

மெய்யற நூல் வழிப் பார்த்தால் இல்லை என்னாது கொடுப்பவர்கள் உயர் குலத்தார்; கொடாதவர்கள் தாழ்ந்த குலத்தார். இந்த வகையில் உலகத்தில் சாதி இரண்டுதான்.

இடும்பைக்கு இடும்பை இயல் உடம்பு இது அன்றே?
இடும் பொய்யை மெய் என்று இராதே—இடும், கடுக;
உண்டாயின், உண்டாகும் ஊழின் பெரு வலிநோய்
விண்டாரைக் கொண்டாடும் வீடு. 3

இடும்பைக்கு = பலவகைத் துன்பங்களுக்கு; இடும் = அணியும்; பை இயல் = சட்டை போன்ற தன்மையுள்ள ; உடம்பு அன்றே இது ? = உடல் அன்றோ இது ? இடும் பொய்யை = கீழே போட்டுவிடப்போகிற நிலையற்ற உடம்பை ; மெய் என்று இராது = (பெயரளவில் 'மெய்' ஆனாலும்) நிலையானது என எண்ணாமல் ; கடுக இடும் = விரைந்து அறம் செய்க! உண்டாயின் = இவ் அற உணர்வு உங்களிடம் ஏற்பட்டு விட்டால்; பெரு வலி நோய் ஊழின் = பெரிய ஆற்றல் மிக்க வியாதிபோன்ற வினையின் நின்றும்; விண்டாரை = விலகிய ஞானிகளை; கொண்டாடும் வீடு = பேணி ஏற்கும் முத்தி ; உண்டாகும் = உங்கட்குச் சித்திக்கும். (ஏ = அசை)

நில்லா உடம்பை நிலை என்று எண்ணாமல் அறஞ் செய்வார்க்கு இறைவன் திருவடிப் பேறு என்னும் வீட்டின்பம் கிட்டும்.

எண்ணி ஒரு கருமம் யார்க்கும் செய்யொண்ணுது;
புண்ணியம் வந்து எய்து போதுஅல்லால்—கண் இல்லான்
மாங்காய் விழ எறிந்த மாத்திரைக்கோல் ஒக்குமே;
ஆம் காலம் ஆகும் அவர்க்கு. 4

யார்க்கும்=எவருக்கும்; எண்ணி=கருதி; ஒரு கருமம்= ஒரு காரியத்தை; செய்யொண்ணுது=நிறைவேற்ற முடியாது ; ஆம் காலம்=முடிகிற நேரம் வந்தால்; அவர்க்கு ஆகும்=அவர்கட்கு நிறைவேறும் ; புண்ணியம் வந்து எய்து போது அல்லால்=முன்னே செய்த அறப்பயன் கிட்டி அடைகின்ற காலம் அல்லாத காலத்தில் (எவ்வளவு தான் முயன்ருலும் அது); கண் இல்லான்=குருடன் ; மாங்காய் விழ=(மரக்கொம்பில் உள்ள) மாங்காயை விழச் செய்ய; மாத்திரைக்கோல் (குருட.னுக்கு வழிகாட்டும்) அளவு கம்பை; எறிந்த=கைவிட்டு வீசியது; ஒக்கும்=ஒப் பாகும்.

எவருக்கும் புண்ணியம் பயக்கும்போது அல்லால் எதையும் நிறைவேற்ற முடியாது. மீறி முனைந்தால் கைக்கோலையும் இழந்த குருடன் கதிதான்.

வருந்தி அழைத்தாலும், வாராத, வாரா ;
பொருந்துவன 'போமின்' என்ருல், போகா—இருந்து ஏங்கி;
நெஞ்சம் புண்ணுக, நெடும் தூரம் தாம் நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். 5

வருந்தி அழைத்தாலும்=பெரும் பாடுபட்டு வேண்டி னுலும்; வாராத=கிட்டமாட்டாதவை ; வாரா=வந்து கூடா ; பொருந்துவன = வந்து சேர்வனவற்றை ; 'போமின்' என்ருல்= இங்கில்லாமல் 'போய்விடுக' எனச் சொன்னுல் ; போகா=செல்லமாட்டா; (இதுவே இயல்பா யிருக்க) இருந்து ஏங்கி=உட்கார்ந்து கவலைப்பட்டுக் கொண்டு ; நெஞ்சம் புண்ணுக=உள்ளம் நோவ ; நெடுந் தூரம் தாம் நினைந்து=நீண்ட நாட்கள் அவர்கள் எண்ணி;

துஞ்சுவதே = செத்தொழிவதே; மாந்தர் = மக்களுக்கு; தொழில்=வேலையாகப் போய்விட்டது.

ஊழ்வினைப் பயனால் விளைவது எதையும் தவிர்க்க முடியாது. எனவே, வீண்கவலை இன்றி வாழ்வாங்கு வாழ முயலல் வேண்டும்.

உள்ளது ஒழிய ஒருவர்க்கு ஒருவர் சுகம்
கொள்ளக் கிடையா, குவலயத்தில்—வெள்ளக்
கடல் ஓடி மீண்டு கரை ஏறினால் என்
உடலோடு வாழும் உயிர்க்கு ? 6

குவலயத்தில்=பூவுலகில்; ஒருவர்க்கு=ஒரு மனிதர்க்கு உள்ளது ஒழிய=வாய்த்ததை அன்றி; ஒருவர் சுகம்= மற்றொருவருடைய இன்பங்கள்; கொள்ள=அடைய; கிடையா=கிட்டமாட்டா; வெள்ளக் கடல் ஓடி=பெருநீர்க் கடல்மீது கப்பலிலே சென்று; மீண்டு கரை ஏறினால்= (செல்வத்தைத் திரட்டிக்கொண்டு) திரும்பவும் ஊருக்கு வந்து சேர்ந்தால்; உடலோடு வாழும் உயிர்க்கு=உடம்புடன் உறைகின்ற ஜீவனுக்கு (ஆன்மாவுக்கு) என்?=அப் பொருளால் என்ன பயன் ? (ஒன்றுமில்லை)

ஒருவர் நலத்தை மற்றொருவர் அனுபவிக்க முடியாது; அங்ஙனமே உடம்பு தேடும் செல்வத்தைக் கொண்டு உயிர் வளம் பெறமுடியாது.

எல்லாப் படியாலும் எண்ணினால், இவ் உடம்பு
பொல்லாப் புழு மலி நோய்ப் புன் குரம்பை ;—நல்லார்
அறிந்திருப்பார்; ஆதலினால், ஆம் கமல நீர் போல்,
பிறிந்திருப்பார்; பேசார் பிறர்க்கு. 7

எல்லாப்படியாலும்=அனைத்து வழிகளிலும்; எண்ணினால்=ஆய்ந்து பார்த்தால்; இவ்உடம்பு=இந்த உடல்; பொல்லா=கொடிய; புழு=கிருமிகள்; மலி=நிரம்பிய; நோய்=பல நோய்களுடன் கூடிய; புன் குரம்பை=அற்பக்

குடில்; நல்லார்=சான்ருேர்; அறிந்திருப்பார்=(இவ் உண்மையை) தெரிந்துள்ளார்; ஆதலினுல்=எனவே ; கமலம் ஆம் நீர்போல்=தாமரையில் உள்ள தண்ணீரைப் போன்று; பிறிந்திருப்பார்=ஓரிடத்தில் இருந்தாலும் ஒட்டாது வேறுபட்டு வாழ்வார் ; பிறர்க்கு=மற்றவர்களுக்கு ; பேசார்=உடம்பைப் பற்றி உபதேசம் செய்யார்.

பலவகையால் பார்த்து இவ்வுடம்பு அற்பம்; ஆனுல் உடம்பின் உள்ளே நிலவும் உயிரே விழுமியது என்பன வற்றை மேலோர் அறிவர். ஆதலால் பற்றற்று—பேச்சற்று—விளங்குவோர்கள்.

ஈட்டும் பொருள் முயற்சி எண் இறந்த ; ஆயினும், ஊழ்
கூட்டும்படி அன்றிக் கூடாவாம் ;—தேட்டம்
மரியாதை காணும் ; மகிதலத்தீர் ! கேண்மின் ;
தரியாது காணும் தனம். 8

மகிதலத்தீர்! =உலகத்தவரே! கேண்மின்=நன்ருகக் கேட்டுக்கொள்ளுங்கள்; பொருள் ஈட்டும்=செல்வத்தைத் தேட; முயற்சி=நீங்கள் மேற்கொள்ளும் உழைப்பானது எண் இறந்த=அளவற்ற வகையாக; ஆயினும்=ஆனுலும் ஊழ்=விதியானது; கூட்டும்படி அன்றி=சேர்த்துவைக்கும் வண்ணம் அல்லாமல் ; கூடா=சேரா ; (ஆதலால்) தேட்டம்=பொருள் சேர்க்கும் ஆசைக்கு; மரியாதை= ஒரு வரம்பு (வேண்டும்); தனம்=செல்வம்; தரியாது= நிலைத்திருக்காது. (ஆம்=அசை; காணும்=முன்னிலைப் பன்மை அசைகள்)

எத்துணை முயன்ருலும் முன்னைவினைக் கேற்பவே செல்வம் சேரும் ; பொருள் தேடும் ஆசைக்கு ஓர் அளவும் வேண்டும் ; பணம் நிலைத்திருக்க மாட்டாது.

ஆற்றுப் பெருக்கு அற்று, அடி சுடும் அந்நாளும், அவ் ஆறு
ஊற்றுப் பெருக்கால் உலகு ஊட்டும் ; — ஏற்றவர்க்கு
நல்ல குடிப் பிறந்தார், நல்கூர்ந்தார் ஆனாலும்
'இல்லை' என மாட்டார் இசைந்து. 9

ஆற்றுப் பெருக்கு அற்று=நதியில் நீரோட்டம் இல்லாது; அடிசுடும் அந் நாளும்=நடப்பவர் பாதம் சுடக் கூடிய அந்தக் கோடை நாளிலும் ; அவ் ஆறு=அந்த நதியானது; ஊற்றுப் பெருக்கால்=ஊற்றுநீர் சுரப்பதால்; உலகுஊட்டும்=மக்களை உண்பிக்கும் ; (அதைப்போல) நல்லகுடிப் பிறந்தார்=சிறந்த பரம்பரையிலே தோன்றிய நல்லவர்கள்; நல்கூர்ந்தார் ஆனாலும்=வறுமை நிலை அடைந்தனர் என்றாலும்; ஏற்றவர்க்கு=இரந்தவர்களுக்கு; இசைந்து=மனமார; 'இல்லை' என மாட்டார்=தர இயலாது என்று கூறமாட்டார்கள்.

நீரோட்டம் இல்லாக் கோடைக்காலத்திலும் ஒரு நதி தன்மருங்கு தோண்டியவர்கட்கு நீரளிக்கும். அங்ஙனமே வறுமை வந்துற்ற போதும் நல்ல குடிமக்கள் வருந்தி வந்தோர்க்கு ஈய மறுக்க மாட்டார்கள்.

ஆண்டு ஆண்டுதோறும் அழுது புரண்டாலும்,
மாண்டார் வருவரோ? மாநிலத்தீர் ! வேண்டா ;
நமக்கும் அது வழியே; நாம் போம் அளவும்
'எமக்கு என்?' என்று, இட்டு, உண்டு இரும். 10

மாநிலத்தீர்!=பேருலகீர்! ஆண்டு ஆண்டு தோறும்= ஒவ்வோர் ஆண்டும் (இறந்தாரை எண்ணி); அழுது புரண்டாலும் =வாய்விட்டுக் கதறிக் கிடந்து உருண்டாலும்; மாண்டார்=இறந்தவர்கள்; வருவரோ?=திரும்பி வருவார்களா? (மாட்டார்கள்) வேண்டா=அழுது புலம்ப வேண்டுவதில்லை; நமக்கும் அதுவே வழி=நமக்கும் இறப்புத்தான் இறுதிப் பாதை;(எனவே), நாம் போம் அளவும்= நாம் சாகும் வரையும்; 'எமக்கு என்?' என்று=எல்லாவற்றையும் நடத்திக்கொண்டிருக்கும் இறைவன் இருக்க

'நமக்கு என்ன கவலே?' என நம்பி; இட்டு=இல்லாதவர் கட்கு ஈந்து; உண்டு=நீங்களும் புசித்து ; இரும்=வாழ்ந் திருங்கள்.

'ஒருநாள் உணவை ஒழி!' என்ருல், ஒழியாய்;
'இரு நாளுக்கு ஏல்!; என்ருல் ஏலாய்; ஒருநாளும்
என்நோ அறியாய்; இடும்பை கூர் என் வயிறே!
உன்ஞேடு வாழ்தல் அரிது. 11

இடும்பை கூர் என் வயிறே!=துன்பத்தை மிகுதியாகத் தரும் என் வயிறே!; ஒருநாள் உணவ்வ=ஒரு தினத்து உண்டியை; ஒழி என்ருல்=விட்டுவிடு என்று சொன்ஞல்; ஒழியாய்=விடமாட்டாய்; இரு நாளுக்கு ஏல் என்ருல்= இரண்டு தினங்கட்கு ஏற்றுக்கொள் எனச் சொன்ஞல்; ஏலாய்=ஏற்கமாட்டாய்; ஒரு நாளும்=ஒரு தினம் கூட ; என்நோ=எனது துன்பத்தை (நான் படும் பாட்டை); அறியாய்=நீ உணரமாட்டாய்; உன்ஞேடு வாழ்தல்= நிலைமையறியாத உன்னுடன் இசைந்து வாழுதல்; அரிது= இயலாதது.

ஒருநாள் உண்ணுமல் இருக்கவும் ஆற்ருய்; இரு நாளுக்குச் சேர்த்து உண்ணவும் மாட்டாய்; என்கஷ்டங் களை அறியாத உன்ஞேடு இசைந்து வாழ்தல் இயலாது.

ஆற்றங்கரையின் மரமும், அரசு அறிய
வீற்றிருந்த வாழ்வும், விழும் அன்றே; ஏற்றம்
உழுது உண்டு வாழ்வதற்கு ஒப்பு இல்லே; கண்டீர்
பழுது உண்டு வேறு ஓர் பணிக்கு. 12

ஆறு கரையின் =நதியின் கரை ஓரத்தில் உள்ள; மரமும்=மரங்களும்; அரசு அறிய=மன்னர்களும் தெரிந்து கொள்ளும்படி; வீற்றிருந்த வாழ்வும்=கீர்த்தி மிக்க அதிகார பீடத்து வாழ்க்கையும்; விழும்=சாய்ந்து விடும்; உழுது உண்டு வாழ்வு=வேளாண்மை செய்து (அதன் மூலம்) புசித்து வாழ்தலே; ஏற்றம்=மேம்பாடு

உடையது; அதற்கு ஒப்புஇல்லை=வேளாண்மைத் தொழிலுக்கு இணை வேறு கிடையாது ; வேறோர் பணிக்கு=மற்ற எந்த ஒரு தொழிலுக்கும்; பழுது உண்டு=குறை உள்ளது. (அம்=சாரியை; அன்று, ஏ,=அசைகள் ; கண்டீர்=முன்னிலை அசை)

ஆற்றங்கரை மரமும், அரசதிகார வாழ்வும் வளமாய்க் காணப்பட்டாலும் எந்த நேரத்திலும் தலைகுப்புறச் சாய்ந்துவிடும். வேளாண்மைத் தொழிலே குறையற்ற மேம்பாடுள்ளது.

ஆவாரை யாரே அழிப்பார்? அது அன்றி,
சாவாரை யாரே தவிர்ப்பவர்? — ஓவாமல்,
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்?
மெய் அம் புவிஅதன் மேல். 13

மெய்=பிரத்யட்சமான; அம்=அழகிய; புவிஅதன் மேல்=நில உலகின்மீது; ஆவாரை=வாழ்தற்கு உரியவர்களை; அழிப்பார் யார்?=கெடுக்க வல்லவர் எவர்? அது அன்றி=அஃது அல்லாமல்; சாவாரை=இறந்து கொண்டிருப்பவரை; தவிர்ப்பவர் யார்?=சாவாமல் விலக்குபவர் எவர்? ஓவாமல் = இடைவிடாமல்; ஐயம் புகுவாரை = பிச்சை ஏற்பாரை; விலக்குவார் யார்?=அப்படிச் செய்யாமல் தவிர்ப்பவர் எவர்? (ஏ=மூன்றும் அசைகள்)

அவரவர் முன்னை வினைப்பயனால்—இயற்கையின் நியதியால்—ஏற்படும் விளைவுகள் எவற்றையும் நம்மால் மாற்ற முடியாது.

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை, பேசுங்கால்
இச்சை பல சொல்லி இடித்து உண்கை—சிச்சீ!
வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது
உயிர் விடுகை சால உறும் 14

பேசுங்கால்=தரம் அறிந்து கூறுமிடத்து; பிச்சைக்கு= பிறரிடம் பிச்சைச் சோறு வாங்கி உண்பதினும்; மூத்த=

இழிவால் முதிர்ந்த; குடிவாழ்க்கை=உயிர் வாழ்தலாவது; பல இச்சை சொல்லி=பலவகையான இச்சக மொழிகளைப் பேசி (அதனால் கிடைக்கும் தானியங்களை); இடித்து=உரலிலிட்டு இடித்து; உண் கை=உண்டு பிழைத்தலாகும். *சிச்சீ!*=கேவலம் இஃதென்ன வாழ்க்கை! வயிறு வளர்க்கைக்கு=எப்படியாவது வயிற்றை வளர்ப்பதை விட, மானம் அழியாது=தன் கௌரவம் கெடாமல்; உயிர் விடுகை=உயிரை மாய்த்துக் கொள்வது; சால உறும்=மிகவும் பொருத்தம் ஆகும்.

பிச்சை வாங்கி உண்பதினும் இழிவான இச்சகம் பேசி வாழ்வதைவிட, மானத்தைப் பேணி, உணவின்றி இறந்தொழிதல் சிறப்பாகும்.

‘சிவாயநம’ என்று, சிந்தித்து இருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை;—உபாயம்,
இதுவே; மதி ஆகும்’ அல்லாத எல்லாம்
விதியே மதி ஆய்விடும். 15

‘சிவாயநம’ என்று=‘சிவாயநம’ என்னும் ஐந்தெழுத்தை செபித்துக்கொண்டு; சிந்தித்து=அம்மந்திரத்திற்குரிய தெய்வத்தை மனத்தால் முழுக்க நினைந்து; இருப்பார்க்கு=உறுதியுடன் இருப்பவர்களுக்கு; ஒரு நாளும்=ஒரு பொழுதும்; அபாயம் இல்லை=ஆபத்து இருக்காது; இதுவே உபாயம்=(விதிப்பயனை வெல்வதற்கு) இதுதான் தக்க தந்திரம்; மதி ஆகும்=வேத முதலான நூல் கூறும் வழி முறையும் இதுவே; அல்லாத எல்லாம்=இஃது அன்றி மற்றைய வழிகள் யாவும்; விதியே மதி ஆய்விடும்=ஊழ் வினையே தன் நெறியில் செல்லுமாறு செய்துவிடும்.

இறைவனை உறுதியாகப் பற்றி அவன் நினைவாகவே இருப்பவர்கட்கு ஊழ்வினையால் விளையும் ஆபத்துக்கள் கூட அகன்றுவிடும்.

தண்ணீர் நில நலத்தால்; தக்கோர் குணம் கொடையால்
கண் நீர்மை மாருக் கருணையால்;—பெண் நீர்மை
கற்பு அழியா ஆற்ருல்; கடல் சூழ்ந்த வையகத்துள்
அற்புதம் ஆம் என்றே அறி. 16

தண்ணீர் = தண்ணீரானது; நில நலத்தால் = நிலத்தின் மண்வாகுக்கு ஏற்றபடியும்; தக்கோர் = நல்ல தகுதியுடையோர்; குணம் கொடையால் = இனிய இயல்பினுலும், வள்ளன்மையாலும்; கண் நீர்மை = கண்களின் தன்மை; மாருக் கருணையால் = நீங்காத அருளாலும்; பெண் நீர்மை = மகளிர் தன்மை; கற்பு அழியா ஆற்ருல் = கற்பொழுக்கம் சிதையாத நெறியாலும்; கடல் சூழ்ந்த = கடல்களால் சூழப்பட்ட; வையகத்துள் = பூவுலகில்; அற்புதம் ஆம் = வியத்தகு சிறப்பாக அமையும்; என்று அறி = என நீ தெரிந்து கொள்க! (ஏ = அசை)

மண் தன்மைக் கேற்பத் தண்ணீரும்; குணத்திற்கும் கொடைக்கும் ஏற்பத் தக்கோரும்; அருள் நிறைவுக் கேற்பக் கண் அழகும், கற்பு நெறி ஒழுக்கத்தால் பெண் நலமும் சிறந்து விளங்கும்.

செய் தீவினை இருக்க, தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ, இருநிதியம்—' வையத்து
அறும் பாவம்' என்ன அறிந்து அன்று இடார்க்கு இன்று
வெறும் பானை பொங்குமோ மேல்? 17

வெறும் பானை = நீர் அரிசி முதலிய இடப்பெருத பானை; மேல் பொங்குமோ? = மேல் நோக்கிப் பொங்கி வருமா? (வராது; அதைப்போல); வையத்து = பூவுலகில்; பாவம் = தீவினைப்பயனுகிய துன்பம்; அறும் என்ன அறிந்து = நீங்கும் என்று தெரிந்து; அன்று = முற் பிறப்பில்; இடார்க்கு = அறம் செய்யாதார்க்கு; இன்று = இப்பிறப்பில்; செய்தீவினை இருக்க = முற்பிறப்பில் செய்த பாபம் சேர்ந்து மூட்டையாய் இருக்கும்பொழுது; தெய்வத்தை நொந்தக்கால் = (விதியை

எண்ணுமல்) கடவுளைப் பழிப்பதால்; இரு நிதியம்=பெரும் செல்வம்; எய்த வருமோ?=அடையும்படி வந்துசேருமா? (வாராது.)

இப் பிறப்பில் வளமாக வாழ முடியாமைக்குக் காரணம் முன்னைப் பிறவிகளில் அறம் செய்யாமையும், பாவம் செய்தமையுமே. ஆதலால், தெய்வத்தை நோவதில் பயனில்லை. (பின்னைப் பிறவிகளிலாவது நாம் நலம் பெற அறம் செய்தல் வேண்டும்).

பெற்ருர், பிறந்தார், பெருநாட்டார், பேர் உலகில்
உற்ருர், உகந்தார், என வேண்டார்—மற்ருேர்
இரணம் கொடுத்தால் இடுவர் ; இடாரே
சரணம் கொடுத்தாலும் தாம். 18

பேர் உலகில்=பெரிய உலகத்தில்; பெற்ருர்=தன்னைப் பெற்றவர்கள்; பிறந்தார்=தன்னுடன் பிறந்தார் அல்லது தனக்குப் பிறந்தவர்கள்; பெருநாட்டார்=தன் பெருமையுள்ள நாட்டினர் ; உற்ருர்=சுற்றத்தவர்; உகந்தார்=நண்பர்கள்; என வேண்டார்=என்று விரும்பிக் கருதாதவர்கள்; (அதாவது பரிவுணர்ச்சி அற்ற உலோபிகள்) மற்ருேர்= இங்ஙனம் இவர்க்கு வேண்டியவர்கள் அல்லாத (தீயோர்கள்) பிறர் ; இரணம் கொடுத்தால் இடுவர்=அடி உதை கொடுத்தால் தம் உடைமைகளை எடுத்துக்கொடுப்பர்; சரணம் கொடுத்தாலும்=(ஏழை எளியவர்கள் அல்லது உற்ருர் உறவினர்) அடைக்கலம் என்று கூறி அடைந்தாலும்; தாம் இடார்=அவர்கள் ஈயமாட்டார்கள்.

உற்ருர் உறவினர், ஏழை எளியோர்க்கு உதவார் தீயோர்க்கே தமது பொருளைக் கொள்ளை கொடுப்பர்.

சேவித்தும் சென்று இரந்தும் தெள் நீர்க் கடல் கடந்தும்
பாவித்தும் பாராண்டும், பாட்டு இசைத்தும்—போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம். 19

வயிற்றின் கொடுமையால்=வயிற்றுப் பசித் துன்பத்தால்; நாம் நாழி அரிசிக்கே=நாம் ஒரு நாளைக்கு ஒருபடி அரிசித் தேவைக்காக; சேவித்தும்=பிறரிடம் அடிமைத் தொழில் செய்தும்; சென்று இரந்தும்=வீடுதோறும் போய் யாசித்தும்; தெள்நீர்=தெளிந்த நீரையுடைய; கடல் கடந்தும்; கடலைக் கப்பல் மூலம் கடந்து அக்கரை சேர்ந்தும்; பாவித்தும்=பலவகைப் பாவனைகள் செய்தும் ; பாட்டு இசைத்தும்=பாடல்கள் பாடியும்; பாழின் உடம்பை= பாழாக இந்த உடலை; போவிப்பம்=செலுத்துவோம்.

வயிற்றுப் பசிக்கொடுமையினால் உணவு தேடுவதற்காகவே மக்கள் பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டுப் பாடுபடுகின்றார்கள். எனவே, பசிக் கொடுமை பெரிது என்பதை நாம் உணரல் வேண்டும்.

அம்மி துணை ஆக ஆறு இழிந்தவாறு ஒக்கும்,
கொம்மை முலை பகர்வார் கொண்டாட்டம்;—இம்மை,
மறுமைக்கும் நன்று அன்று; மா நிதியம் போக்கி
வெறுமைக்கு வித்து ஆய்விடும். 20

கொம்மை முலை பகர்வார்=திரண்ட தனங்களை விலை கூறுவோராகிய வேசியரை; கொண்டாட்டம்=கூடி மகிழ்வது; அம்மி துணை ஆக=அம்மிக்கல்லை உதவியாகக் கொண்டு; ஆறு இழிந்தவாறு ஒக்கும்=ஆற்றில் விழுந்த வண்ணம் போலாகும்; இம்மை=இப்பிறப்பில்; மாநிதியம் போக்கி=பெரும் செல்வத்தை இழக்கச் செய்து ; வெறுமைக்கு=உடல் ஆற்றல் கெட்டழிவதற்கும்; வித்து ஆய்விடும்=அடிப்படை ஆகிவிடும். மறுமைக்கும்=மறுபிறவிக்கும்; நன்று அன்று=நன்மை அல்ல.

அம்மிக்கல்லைக் கட்டிக்கொண்டு ஆற்றில் விழுந்தவன் எப்படி மீள முடியாதோ அப்படியே வேசியர் உறவு கொண்டவன் செல்வமும் கெட்டு உடம்பும் கெட்டுப் பாழாவான். மறு பிறப்பிலும் இத் தீவினைப் பயன் அவனைத் தொடரும்.

நீரும், நிழலும், நிலம் பொதியும் நெற்கட்டும்
பேரும், புகழும், பெருவாழ்வும்,— ஊரும்,
வரும் திருவும், வாழ்நாளும்,வஞ்சம் இலார்க்கு என்றும்
தரும்; சிவந்த தாமரையாள்தான். 21

வஞ்சம் இலார்க்கு=கபடம் இல்லாதவர்கட்கு; சிவந்த தாமரையாள்=செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள்; நீரும்=தண்ணீரும்; நிழலும்=வீடும்; நிலம் பொதியும் நெற்கட்டும்=விளைநிலத்து நிறையும் நெற்கட்டும்; பேரும்=ஆட்களும்; புகழும்=கீர்த்தியும்; பெருவாழ்வும்= நல்ல மனைவி மக்களுடன் கூடிய நிறை வாழ்க்கையும்; ஊரும்=வாழ்வதற்கு நல்ல ஊரும்; வரும் திருவும்=வந்து கொண்டேயிருக்கும் செல்வமும் (நிலையான வருமானமும்) வாழ்நாளும்=நீடிய ஆயுளும்; என்றும் தரும்=எப்பொழுதும் கொடுப்பாள்.

கபட மில்லாதவர்கட்குத் திருமகளின் திருவருளால் எல்லா நற்பேறுகளும் நிரந்தரமாய்க் கிட்டும்.

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே! கேளுங்கள்; கூடு விட்டு இங்கு
ஆவிதான் போயின பின்பு யாரே அனுபவிப்பார்,
பாவிகாள் அந்தப் பணம் ? 22

பாடுபட்டு=பெருங்கஷ்டப்பட்டு; பணத்தைத் தேடி= செல்வத்தைச்சம்பாதித்து; புதைத்துவைத்து=மண்ணிற்குள் புதைத்து வைத்து; கேடுகெட்ட மானிடரே!=நிலை அழிந்த மனிதர்களே!; பாவிகாள்! = தீயோரே! கேளுங்கள்=நான் கூறுவதைச் செவிமடுங்கள்; ஆவி=உயிர்; கூடுவிட்டு=உடம்பை விட்டு; போயின பின்பு=அகன்று சென்ற பிறகு; அந்தப் பணம்=புதைத்துவைத்த செல்வத்தை; இங்கு=இவ்விடத்தே; அனுபவிப்பார் யார்?= பயன்படுத்துவோர் எவர் ?

கஷ்டப்பட்டுச் சம்பாதித்த செல்வத்தை அற வழியிற் செலவிட்டுத் தானும் அனுபவிக்க வேண்டுமேயன்றிப் புதைத்துவைத்தல் பாபம்.

வேதாளம் சேருமே; வெள் எருக்குப் பூக்குமே ;
பாதாள மூலி படருமே;—மூதேவி
சென்று இருந்து வாழ்வளே; சேடன் குடிபுகுமே ;
மன்று ஓரம் சொன்னார் மனை. 23

மன்று ஓரம் சொன்னார் மனை=நீதித்தலத்திலிருந்து கொண்டு ஒருதலைச் சார்பாய்த் தீர்ப்புக் கூறியவர்களின் வீட்டில்; வேதாளம் சேரும்=கொடிய பேய்கள் சென்றடையும்; வெள் எருக்குப் பூக்கும்=வெள்ளை எருக்கம் செடி மண்டி மலர்ந்திருக்கும் ; பாதாள மூலி படரும்=மிக ஆழ வேர் விழ்க்கும் சிந்தில் கொடி முதலிய பரவிக்கிடக்கும்; மூதேவி சென்று இருந்து வாழ்வள்=துன்பத்திற்கு உரிய சேட்டை அவ் விட்டிற்குப் போய் நிலைத்து வசிப்பாள்; சேடன் குடிபுகும்=கொடிய விஷப்பாம்புகள் குடும்பமாய்ப் போய்ச் சேரும். [ஏ=ஐந்தும் அசைகள்]

ஒருதலைச் சார்பாகத் தீர்ப்புக் கூறியவர்களின் வீடு குட்டிச்சுவராய்ப் போகும்.

நீறு இல்லா நெற்றி பாழ்; நெய் இல்லா உண்டி பாழ்;
ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ்; மாறுஇல்
உடன் பிறப்பு இல்லா உடம்பு பாழ்; பாழே
மடக்கொடி இல்லா மனை. 24

நீறு இல்லா=திருநீறு என்னும் விபூதி அணியாத; நெற்றி பாழ்=நெற்றி பயனற்றது; நெய் இல்லா=ஆவின் நெய் இன்றேல்; உண்டி பாழ்=உணவு முழுமை ஆகாது; ஆறு இல்லா ஊருக்கு=நதிஇல்லாத ஊருக்கு; அழகு பாழ்= செழிப்பான பொலிவு இருக்காது; மாறு இல்=கருத்து வேறுபாடு இல்லாத; உடன்பிறப்பு இல்லா=சகோதர, சகோதரிகள் இல்லாத; உடம்பு பாழ்=பிறவி பயனற்றது; மடக்கொடி இல்லா=நற்குணமுள்ள மனைவி இல்லாத; மனை பாழ்=குடும்பம் பயனற்றது.

திருநீறு அணிவதால் நெற்றியும், நெய் சேர்வதால் உணவும், ஆற்றினால் ஊரும், மனம் ஒத்த சகோதர சகோதரிகளால் பிறவியும், நல்ல மனைவியால் குடும்பமும் செம்மையாக அமையும்.

ஆன முதலில் அதிகம் செலவு ஆனுல்
மானம் அழிந்து, மதிகெட்டு, போன திசை
எல்லார்க்கும் கள்ளன்ஆய், ஏழ் பிறப்பும் தீயன்ஆய்,
நல்லார்க்கும் பொல்லன்ஆம்; நாடு. 25

ஆன முதலில்=ஏற்பட்ட முதலீட்டுப் பணத்தில் அதிகம்=வரவுக்குமேல் மிகுதியாக ; செலவு ஆனுல்= செலவு ஏற்பட்டால்; மானம் அழிந்து=தன்மதிப்புக் கெட்டு; மதிகெட்டு=அறிவு இழந்து; போனதிசை=சென்ற திக்குகளில் எல்லாம்; எல்லார்க்கும்=அறிந்தோர் அறியாதார் அனைவருக்கும்; கள்ளன் ஆய்=மோசக்காரன் ஆகி; ஏழ்பிறப்பும்=ஏழு பிறவிகளிலும்; தீயன் ஆய்=கெட்டவன் ஆகி; நல்லார்க்கும்=தன்பால் அன்புடைய மகளிர்க்கும்; பொல்லன் ஆம்=வேண்டாதவன் ஆகிவிடுவான்; நாடு= இதனை நீ கண்டுகொள்.

வரவுக்குமேல் செலவு செய்பவன் எல்லாவகையாலும் கேடுறுவான். மறு பிறப்புக்களிலும் துன்பம் அடைவான்.

மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை.
தானம், தவம், உயர்ச்சி, தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல், பத்தும்
பசி வந்திடப் போம் பறந்து. 26

பசி வந்திட=வயிற்றுப் பசி உண்டாகுமேல், மானம்= தன் மதிப்பும்; குலம்=தன் உயர் குலப் பிறப்புணர்வும்; கல்வி=தான் கற்ற நூலறிவும்; வண்மை=ஈகைக்குணமும்; அறிவுடைமை=தன் பகுத்தறிவும்; தானம்=தன்னுடைய பதவியும்; தவம்=தன்னுடைய சாந்த குணமும்; உயர்ச்சி= தன் ஒழுக்க உயர்வும்; தாளாண்மை=ஊக்கமும்; தேனின் கசி வந்த=தேன் ஒழுக்கை ஒத்த; சொல்லியர் மேல்=இனிய மொழியை உடைய மகளிர் மீது;காமுறுதல்= வேட்கை கொள்ளுதலும் ; பத்தும்=ஆகிய இப்பத்தும்; பறந்து போம்=இருந்த இடம் தெரியாமல் ஓடிவிடும். (வந்த=உவமனுருபு)

வயிற்றுப் பசி வந்துவிட்டால் எல்லாச் சிறப்புக்களும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போம். பசிக்கொடுமை அத்துணை வலியது.

ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்று ஆகும்;
அன்றி அது வரினும் வந்து எய்தும்;—ஒன்றை
நினையாதமுன் வந்து நிற்பினும் நிற்கும்;
எனை ஆளும் ஈசன்செயல். 27

ஒன்றை நினைக்கின்=ஒன்றை எண்ணி விரும்பினுல்; அது ஒழிந்திட்டு=அது கிட்டாது அகன்று போய்; ஒன்று ஆகும்=மற்ருென்று வந்து சேரும்; அன்றி=அல்லாமல்; அது வரினும்=ஒருக்கால் அதுவே வந்தாலும்; வந்து எய்தும்=வந்து சேரும்; ஒன்றை=நமக்குத் தேவையான ஒரு பொருளை; நினையாத முன்=எண்ணுததற்கு முன்னதாகவே; வந்து நிற்பினும் நிற்கும்=நம் எதிரில் வந்து அப்பொருள் நின்ருலும் நிற்கக்கூடும்; (இவை எல்லாம்) எனை ஆளும் = என்னை அடிமையாகக் கொண்ட ; ஈசன் செயல்=இறைவனின் திருவருட் செய்கைகளே!

எல்லாம் இறைவன் திருவுளப்படியே நடக்கும். நாம் எண்ணுவதுபோல் நடந்தாலும், மாறி நடந்தாலும், நடக்காவிட்டாலும், அது இறைவன் சித்தம் என்று நம்பினுல் நாம் ஏமாற்றமடையாமல் மன அமைதி பெற்று வாழலாம்.

உண்பது நாழி; உடுப்பது நான்கு முழம்;
எண்பது கோடி நினைந்து எண்ணுவன;—கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை, மண்ணின் கலம் போல,
சாம் துணையும் சஞ்சலமேதான். 28

உண்பது நாழி=உண்ணுவதற்கு வேண்டியதோ ஒரு படிச் சோறு; உடுப்பது நான்கு முழம்=கட்டிக் கொள்ளுவதற்கு வேண்டியதோ நான்கு முழ வேட்டி; (இந்த இன்றியமையாத் தேவைக்குமேல்) நினைந்து எண்ணுவன= மனக்கோட்டை கட்டி மனிதன் கணக்குப் போடுவதோ; எண்பது கோடி=எண்பது கோடி (அதாவது எண்ணற்

றவை); கண்புதைந்த=அறிவுக்கண் மூடப்பட்டுக்கிடக்கும்; மாந்தர்=மனிதர்களின்; குடிவாழ்க்கை=இவ் உடலுடன் கூடிய வாழ்வு; மண்ணின் கலம் போல=மண்ணால் ஆன பானையைப் போன்று; சாம் துணையும்=இறக்கும் வரையும்; சஞ்சலமே=கவலைதான். (ஏ=தேற்ற ஏகாரம்; தான்= அசை)

மட்கலத்தைப் போல எப்போது உடையும் என்று தெரியாத நிலையற்ற உடம்புடன்கூடி வாழும் மனிதனின் தேவை ஒருபடிச் சோறும், நான்கு முழத் துணியுமே! அப்படியிருக்க, கட்டுகிற மனக்கோட்டை அளவிட முடியாததாக வுள்ளது. அதனால் கவலைதான் கண்ட பலன்.

மரம் பழுத்தால், வெளவாலை, 'வா' என்று கூவி
இரந்து அழைப்பார் யாவரும் அங்குஇல்லை;—சுரந்து
கன்று ஆ தரல்போல் கரவாது அளிப்பரேல் [அமுதம்
உற்றார், உலகத்தவர். 29

மரம் பழுத்தால்=ஒரு மரமானது பழுத்துவிட்டால்; வெளவாலை=கனியையே உண்ணும் வெளவாலை; 'வா' என்று கூவி="மரம் பழுத்து விட்டது வெளவாலே! இங்கே வருக!" என்று ஓசையிட்டு; இரந்து அழைப்பார்= வருந்திக் கூப்பிடுபவர்; யாவரும் அங்கு இல்லை=எவரும் அம் மரத்தடியில் இல்லை; (அம் மரத்தைப்போலக் கேட்கா மலே) கன்று ஆ=கன்றை உடைய பசு; அமுதம்=பாலை; சுரந்து=பொழிந்து; தரல் போல்=கொடுப்பதைப்போல (அதாவது தம்மிடம் வந்து பெற முயல்பவர்கட்கு பசுக்கள் பாலைச் சுரந்து தருவதுபோலக் கேட்டவர்கட்குக் கேட்ட பின்பாவது); கரவாது அளிப்பரேல்=மறைக்காமல் கொடுப்பார்களானால்; உலகத்தவர்=மக்கள் யாவரும்; உற்றார்=சுற்றத்தார் ஆவர்.

மரத்தைப்போல தானேயோ, அல்லது கன்றுடைப் பசுவைப் போலத் தன்னை வேண்டிய பின்னரோ உள்ளதை ஒளிக்காமல் கொடுப்பவர்களை மக்கள் யாவரும் சுற்றமாய்ச் சூழ்வர்.

தாம் தாம் முன் செய்த வினை தாமே அனுபவிப்பார்,
பூந் தாமரையோன் பொறி வழியே;—வேந்தே
ஒறுத்தாரை என் செயலாம்? ஊர் எல்லாம் கூடி
வெறுத்தாலும் போமோ விதி? 30

வேந்தே ஒறுத்தாரை=எல்லாருக்கும் மேம்பட்ட அதிகாரத்தை உடைய அரசனாலேயே தண்டிக்கப்பட்டவர்களை; என் செயலாம்=எப்படிக் காப்பாற்ற இயலும்? ஊர் எல்லாம் கூடி=சிற்றதிகாரம் உள்ள ஊர்ச் சபைகள் யாவும் ஒருங்கு சேர்ந்து; வெறுத்தாலும்=அரசன் முடிவை விரும்பாவிட்டாலும்கூட; விதி=அரசனின் தீர்ப்பு; போகுமோ = மாறிப்போய்விடுமா? (போகாது; அது போல,) பூந்தாமரையோன்=தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன்; பொறிவழி=எழுதிய எழுத்தின்படி; தாம் தாம்= அவரவரும்; முன்=முற்பிறவியிலே; செய்த வினை=புரிந்த நல்வினை, தீவினைப் பயன்களை; தாமே=அவர்களே; அனுபவிப்பர்=துய்ப்பார்கள்.

(தாமே என்பதில் உள்ள 'ஏ' தேற்ற ஏகாரம்; வழியே என்பதில் உள்ள 'ஏ' பிரிநிலை; வேந்தே என்பதில் உள்ள 'ஏ' உயர்வு குறித்து நின்றது)

உச்சநிலை அதிகாரமுள்ள வேந்தன் தீர்ப்பை எப்படி எவராலும், மாற்ற முடியாதோ, அப்படியே, வினைப்பயனால் விளையும் நன்மை தீமைகளையும், எவராலும், மாற்ற முடியாது.

இழுக்கு உடைய பாட்டிற்கு, இசை, நன்று; சால,
ஒழுக்கம் உயர்குலத்தின், நன்று,—வழுக்கு உடைய
வீரத்தின் நன்று, விடா நோய்; பழிக்கு அஞ்சாத்
தாரத்தின் நன்று, தனி. 31

இசை=வெறும் இராகம்; இழுக்கு உடைய=குற்றம் உள்ள; பாட்டிற்கு = பாட்டை விட; நன்று = நல்லது; ஒழுக்கம் = சிலம்; உயர்குலத்தின் = மேலான குலப் பிறப்பைவிட; சாலநன்று=மிகவும் நல்லது; விடாநோய்=

தீரா வியாதி (மெலிவு); வழுக்கு உடைய வீரத்தின் நன்று= குறைபாடு உள்ள உடல் வல்லமையை விட நல்லது; தனி=தனியான வாழ்க்கை; பழிக்கு அஞ்சாத் தாரத்தின் நன்று=நிந்தனையைப் பொருட்படுத்தாத மனைவியுடன் கூடி வாழ்வதைவிட நல்லது.

குற்றமுள்ள பாட்டைவிட வெறும் இசை நன்று; உயர் குடிப் பிறப்பினும் ஒழுக்கமே நன்று; செம்மையற்ற ஆண்மையைவிட நிரந்தரப் பலவீனம் நன்று; பழி பாவத்திற்கு அஞ்சாத மனைவியுடன் வாழ்வதைவிடத் தனியாக வாழ்வது நன்று.

ஆறு இடு மேடும் மடுவும் போல், ஆம் செல்வம்,
மாறிடும், ஏறிடும்; மாநிலத்தீர்!—சோறு இடும்;
தண்ணீரும் வாரும்; தருமமே சார்பு ஆக,
உள் நீர்மை, வீறும், உயர்ந்து. 32

மாநிலத்தீர்!=பேருலகீர்! ஆம் செல்வம்=அமைகின்ற பொன் முதலிய பொருள்; ஆறு இடு=நதியில் வெள்ளம் உண்டாக்குகிற; மேடும், மடுவும் போல்=மேட்டையும், பள்ளத்தையும் போன்று; மாறிடும்=ஒருக்கால் நம்மிட மிருந்து வேறிடம் சென்றுவிடும்; ஏறிடும்=மற்றொருக்கால் வளர்ச்சி பெறும்; (ஆதலால் செல்வத்தைப் பெரிதாகக் கருதாமல்) சோறு இடும்=பசித்தோர்க்கு உணவு அளியுங்கள்; தண்ணீரும் வாரும்=தாகத்துடன் வந்தவர்கட்குக் குடிநீரும் ஊற்றுங்கள்; (அதனால்) தருமமே சார்பு ஆக= அறமே உங்கட்கு உற்ற துணை ஆக; உள் நீர்மை=அகச் சிறப்பு; உயர்ந்து வீறும்=மேலோங்கி மிளிரும்.

செல்வம் நிலையற்றது; கூடும், குறையும்; வரும், போகும்; அறமே நிலையானது; பயன் தருவது; ஆதலால் அறம் செய்தல் வேண்டும்.

வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம்; வேழத்தில்
பட்டு உருவும் கோல் பஞ்சில் பாயாது;—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்கு விடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும். 33

வேழத்தில்=யானையின் உடம்பில்; பட்டு=தைத்து; உருவும் கோல்=அப்புறம் கழன்றோடும் அஸ்திரம்; பஞ்சில் பாயாது=பஞ்சின்மேல் தைத்து உருவாது; நெடு இருப்புப் பாரைக்கு=நீண்ட இரும்புக் கடப்பாரைக்கு; நெக்கு விடாப் பாறை=இடைவெளி தராத கற் பாறை; பசு மரத்தின்=இளைய மரத்தின்; வேருக்கு=சிறுவேர்களுக்கு; நெக்கு விடும்=இடைவெளி தரும்; (இவற்றைப் போல) வெட்டெனவை=கடுஞ்சொற்கள்; மெத்தெனவை=மென் சொற்களை; வெல்லா=வெற்றிகொள்ளமாட்டா (ஆம்= அசை)

வலிய யானையின் உடலிற் பாய்ந்து அப்புறம் செல்லும் வலிய அஸ்திரம் மெல்லிய பஞ்சுப் பொதியில் தைத்து உருவாது; இருப்புப் பாரைக்கு இடம் கொடுக்காத மலைப்பாறை இள மரத்தின் வேர் புக இடம் கொடுக்கும். அங்ஙனமே கடுஞ்சொல் பயன் தராது; மென்சொல் பயன் தரும். வன்மைக்கும் மென்மைக்கும் உள்ள போட்டியில் மென்மை வெல்லும்.

கல்லானே ஆனாலும், கைப்பொருள் ஒன்று உண்டாயின்
எல்லாரும் சென்று அங்கு எதிர்கொள்வர்;—இல்லானை
இல்லாளும் வேண்டாள்; மற்று, ஈன்று எடுத்த தாய்
வேண்டாள்
செல்லாது அவன் வாயில் சொல். 34

கல்லானே ஆனாலும்=படியாதவனே என்றாலும்; கைப் பொருள் ஒன்று உண்டாயின்=அவன் இடத்திலே செல்வம் ஒன்று மட்டும் இருக்குமானால், எல்லோரும்=அனைவரும்; சென்று=அவன் வரும் இடம் போய்; அங்கு=அவ்விடத்தில் ; எதிர்கொள்வர்=வரவேற்று உபசரிப்பர்;

இல்லானை = (கற்றறிவுள்ளவனாயினும்) பொருளற்றவனை; இல்லாளும் வேண்டாள் = மனையாளும் விரும்பாள்; மற்று = மேலும்; ஈன்று எடுத்த = கருவுயிர்த்துச் சுமந்து மகிழ்ந்த; தாய் வேண்டாள் = அன்னையும் விரும்பாள்; அவன் வாயில் சொல் = அத்தகைய வறியவன் வாயிலிருந்து வரும் சொல்லும்; செல்லாது = ஏற்கப்பட மாட்டாது.

என்ன இருந்தாலும் செல்வம் இன்றேல் இவ்வுலகில் பயனில்லை என்று செல்வத்தின் இன்றியமையாமை வலியுறுத்தப்பெற்றது.

பூவாதே காய்க்கும் மரமும் உள; மக்களுளும்
ஏவாதே நின்று உணர்வார் தாம் உளரே;—தூவா
விரைத்தாலும் நன்று ஆகா வித்து எனவே, பேதைக்கு
உரைத்தாலும் தோன்றாது உணர்வு. 35

பூவாதே = மலர் பூக்காமலே; காய்க்கும் = காய்க்கிற; மரமும் உள = (பலா, அத்தி போன்ற) மரமும் உண்டு; (அவ்வாறே) மக்களுளும் = மனிதர்களுக்குள்ளும்; ஏவாதே நின்று = ஓதாமலே இருந்து; உணர்வார்தாம் உளர் = அறிவுத்தெளிவு உள்ளவர்கள் இருக்கிறார்கள்; தூவா = தூவி, மிகுதியாகக் கொட்டி; விரைத்தாலும் = விதைபாவினாலும்; நன்றாகாவித்து என = முளைக்காத விரையைப்போல; பேதைக்கு = மடையனுக்கு; உரைத்தாலும் = எவ்வளவு தான் விளக்கமாகச் சொன்னாலும்; உணர்வு = அறிவுத் தெளிவு; தோன்றாது = ஏற்படாது. (முதல் இரண்டு 'ஏ' தேற்றம்; மூன்றாவது 'ஏ' அசை).

பூக்காமல் காய்க்கும் மரத்தைப் போலக் கல்லாமல் அறிவுத் தெளிவுடையோரும் உளர்; எவ்வளவு கொட்டினாலும் முளைக்காத விதையைப்போல எவ்வளவு விளக்கமாக எடுத்துரைத்தாலும் மடையனுக்கு அறிவுத்தெளிவு உண்டாகாது.

நண்டு, சிப்பி, வேய், கதலி, நாசம் உறும் காலத்தில்
கொண்ட கருஅளிக்கும் கொள்கைபோல்-ஒண்டொடீஇ!
போதம், தனம், கல்வி, பொன்றவரும் காலம் அயல்
மாதர்மேல் வைப்பார் மனம். 36

ஒள் தொடீ! ஒளியுள்ள வளை அணிந்த பெண்ணே! நண்டு, சிப்பி, வேய், கதலி=நண்டும், இப்பியும், மூங்கிலும், வாழையும்; கொண்ட கரு அளிக்கும்=தம்முள் உண்டான (முறையே) குஞ்சு, முத்து, அரிசி; குலை ஆகியவற்றைக்கொடுத்த; காலத்தில் = பருவத்தில்; நாசம் உறும் கொள்கைபோல்=தாம் அழிந்து போகக்கூடிய நிலைமையைப் போல; போதம், தனம், கல்வி=அறிவும், செல்வமும், கல்வியும்; பொன்றவரும் காலம் = அழியக்கூடிய நேரத்தில்; அயல் மாதர்மேல்=பிற பெண்களின் மீது; மனம் வைப்பார் = (மனிதர்கள்) உள்ளத்தைப் பதிப்பார்கள்.

பிறன் மனை நோக்கிய மனிதர்கள் அறிவு, செல்வம், கல்வி முதலிய எல்லாத் தகுதிகளையும் இழந்து துன்புறுவார்கள்.

வினைப்பயனை வெல்வதற்கு வேதம் முதலாம்
அனைத்துஆய நூலகத்தும் இல்லை;—நினைப்பு அதுஎனக்
கண் உறுவது அலால் கவலை படேல்; நெஞ்சே! மெய்
விண்ணுறுவார்க்கு இல்லை விதி. 37

வினைப் பயனை=புண்ணியம் பாவம் ஆகிய இருவினைகளின் பலனை; வெல்வதற்கு=அனுபவிக்காமல் தப்பித்துக் கொள்ளுவதற்கு; வேதம் முதலாம் = மறை தொடங்கி; அனைத்து ஆய நூலகத்தும்=எவ்வகையான அற நூல்களுள்ளும்; இல்லை=வழி இல்லை; நெஞ்சே!=ஏ,மனமே! நினைப்பு =எண்ணம் முழுதும் ; அது என=அப் பரம்பொருளே என்று சொல்லும்படி ; கண் = நல்லறிவை ; உறுவது அலால்=அடைவதை அன்றி; கவலைபடேல்=சஞ்சலம் அடையாதே; (ஏன் என்றால்) விண் உறுவார்க்கு=வீடு

பேற்றை அடைபவர்கட்கு ; விதி இல்லை = ஊழ்வினை இல்லை; மெய் = இது கண்கண்டது.

விதியை வெல்ல வழியே இல்லை ; ஆனால் இறைவனை எண்ணி, பிற கவலையை நீக்கி, முத்தியில் மனம் ஒன்றியவர்கட்கு எவ்விதியும் இல்லை.

நன்று என்றும் தீது என்றும், நான் என்றும் தான் என்றும்,
அன்று என்றும் ஆம் என்றும் ஆகாதே — நின்ற நிலை;
தான் அது ஆம், தத்துவம் ஆம்; சம்பு அறுத்தார் யாக்கைக்குப்
போனவா தேடும் பொருள். 38

சம்பு =(சம்பு என்ற பிரிவைச்சேர்ந்த) கோரைப்புல்; அறுத்தார் = அறுவடை செய்தவர்கள்; யாக்கைக்கு =(அப்படி அறுத்த கோரையை) கட்டுதற்கு; தேடும் பொருள் = வேண்டும் பண்டம்; போனவா =(ஒன்றேயாக) அமைந்தபடியே.

நன்று என்றும் = நன்மை எனவும்; தீது என்றும் = தீமை எனவும்; நான் என்றும் = யான் எனவும்; தான் என்றும் = அவன் எனவும்; அன்று என்றும் = ஆகாது எனவும்; ஆம் என்றும் = ஆகும் எனவும்; நின்ற நிலை = கருதி இருந்த இருப்பு; ஆகாது = பொருந்தாது. தான் = உயிராகிய தான்; அது = இறையாகிற அது ; ஆம் தத்துவம் = ஆகின்ற உண்மை நிலை; ஆம் = பொருந்தும்.

கோரையும் அதைச் சேர்த்துக் கட்டிய கயிறும் வேறாக நின்றாலும் பொருள் ஒன்றே; அதைப்போல உயிரும் இறையும் வேறாக இருப்பினும் இறையுடன் ஒன்றியிருப்பதே அழியா அறிவுடையாகும்.

முப்பதாம் ஆண்டு அளவில், மூன்று அற்று, ஒருபொருளை,
தப்பாமல், தன்னுள் பெறான் ஆயின், — செப்பும்
கலை அளவே ஆகும் ஆம்; காரிகையார் தங்கள்
முலை அளவே ஆகும் ஆம் மூப்பு. 39

காரிகையார் = மகளிர்; மூப்பு = கருவுயிர்க்கும் தன்மை அகன்ற முதுமைக் காலம்; முலை =(குழந்தைக்கு அமுது சுரக்கா நிலையில்) தனங்கள்; அளவே ஆகும் = பெண்

னுக்கு ஒரு பிரமாணமாகவே அமையும் ;-(அதைப் போல) முப்பதாம் ஆண்டு அளவில்=முப்பதாம் வயதை ஒட்டிய காலத்தில் (ஒருவன்); மூன்று அற்று=(ஆணவம், கன்மம், மாயை என்னும்) முக் குற்றங்களும் நீங்கி; ஒரு பொருளை= ஒப்பற்ற பொருளாகிய இறையை; தன்னுள்=அவன் அகத்தில்; பெறான் ஆயின்=கொள்ளான் என்றால்; கலை=அவன் கற்ற கலை அறிவு; செப்பும் அளவே ஆகும்=அழகாகப் பேசும் பேச்சளவே ஆகும்;

(பின் இரண்டு ‘ ஆம் ’ களும் அசை)

குழந்தைபெறு முதுமைக் காலத்தில் முதுமகளிர்க்குத் தனங்கள் எவ்வாறு பயன் அற்றவையோ அவ்வாறே முப்பது ஆண்டுகள் முடிவதற்குள் இறையுணர்வைப் பெறாதவனின் கல்வியும் பயனற்றதே ஆகும்.

தேவர் குறளும், திருநான்மறை முடிவும்,
மூவர் தமிழும், முனிமொழியும்—கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்,
ஒரு வாசகம் என்று உணர். 40

தேவர் = திருவள்ளுவர் அருளிய; குறளும் = திருக்குறளும்; திருநான்மறை முடிவும் = புனிதமான நான்கு வேதங்களின் அந்தமான உபநிஷதங்களும்; மூவர் தமிழும்=அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூன்று சமயாசாரியர்களால் அருளப் பெற்ற தேவாரமும்; முனி மொழியும் = அருந்தவ அந்தணரான மணிவாசகர் திருவாய் மலர்ந்தருளிய; கோவை=திருக்கோவையாரும்; திருவாசகமும் = திருவாசகமும்; திருமூலர் சொல்லும் = திருமூலர் அருளிய உறுதிச் சொல்லான திருமந்திரமும்; ஒரு வாசகம் =ஒப்பற்ற மொழிகள்; என்று உணர் = என மனத்துக் கொள்க !

திருக்குறள், உபநிஷதம், தேவாரம், திருக்கோவையார், திருவாசகம், திருமந்திரம் ஆகிய இவை எல்லாம் ஒப்பற்ற நூல்கள்.

நல்வழி வெண்பா நாற்பதன் உரையும்
சொல்லரும் தெய்வத் துணையால் முற்றும்.